முருகப்பெருமான் துணை

**மகான் சடைய நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.05.2021, புதன்கிழமை

1. வள்ளலாய் வாழும் ஞானியே
வையகம் காத்தருள வேண்டி
வள்ளலின் சக்தியாக வந்த
வடிவேலரின் அவதார தவசியே
2. தவசியே உன்பெருமை கூறி
தரணியில் பிலவ தகரின் திங்கள்
அவனியில் இருபானீர் திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 22ம் நாள், 05.05.2021 புதன்கிழமை)
அறிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை சடைய நாயனாரும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசிவென்ற தலைவன் வழி
வையகத்தை ஞானிகள் படை
4. ஞானிகள் படை காத்து வருக
நம்பிக்கை வைத்து உலகமக்கள்
ஞானிகள் பூசை கலந்து வர
நாம செபம் செய்து வர
5. வருகின்ற காலங்களிலும்
வணங்கி அரங்க ஞானியை
குருவாக ஏற்றுப் பின்தொடர
குவலயமெங்கும் தருமம் வளர்த்து
6. வளர்த்து அரங்கன் வழி
வடிவேலன் அருளும் மகத்துவம்
தளர்விலா அடைந்து மக்கள்
தருமவான்களாக நிலை உயர
7. உயரவே வையகம் எங்கிலும்
உயர்வான சமூகச் சூழல் பரவி
தயவானவர்கள் தலைமையாகவும்
தருமஞான ஆட்சிக் காலமாகவும்
8. ஆகவே அற்புதம் நிகழ்ந்து
அகிலமே மாற்றம் காணும்
வகையான மேலவர்கள் ஆசியும்
வள்ளல் தன்மையும் கூடியே
9. கூடியே மக்களுக்கு ஞானியாகும்
குருவருளும் திருவருளும் கூடி
நாடிடும் உயர்நிலைகள் தானும்
ஞானிகள் படை பெருகபெருக

10. பெருகவே வையகம் தானும்
பெருந்தயவு மிக்க மேலவர்கள்
முருகப் பெருமான்  அருட் தயவுமாய்
முழுமைபட ஞான ஆட்சி மலரும்

11. மலரும் அரங்க ஞானியால்
மனிதர்கள் ஆட்சி முடிவுகண்டு
மலரும் ஞானவான் ஞானிகள் ஆட்சியாக
மண்ணுலகம் ஏற்றம் பெறும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–